kalvi.lk

24581
6 1 2

AL/2015/72/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) பொங்குதிரை பொருத வார்மண லடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்கா லலவன் கொண்டகோட் கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை யெய்திய விடுக்குந்
துறைகெழு மாந்தை யன்ன இவள் நலம்
பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய
உழையிற் போகா தளிப்பினுஞ் சிறிய
ஞெகிழ்ந்த கவினலங் கொல்லோ மகிழ்ந்தோர்
கட்கழி செருக்கத் தன்ன
காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே

(அ) இச்செய்யுளில் முதல், கரு, உரிப் பொருட்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.
(ஆ) இச்செய்யுளில் இடம்பெறும் உள்ளுறை உவமத்தை இனங்கண்டு விளக்குக.
(இ) இச்செய்யுளிற் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.
(ஈ) தோழி கூற்றாக அமைந்துள்ள இச்செய்யுளில் அவளின் மதிநுட்பம் புலப்படுமாற்றைத் துலக்குக.

(ii) நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கேகயன் றனயை.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(இ) இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.
(ஈ) வேறென்ன அணி இச்செய்யுளில் இடம்பெறுகிறது ? அதனை விளக்குக. (24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk



**2.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) பொழுது புலர்ந்தது; யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னும் எம் தாயே
வியப்பிதுகாண்! பள்ளி எழுந்தருளாயே!

புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்
பொங்கிய தெங்கும் சுதந்திர தாகம்
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்
வீதியெலாம் அணுகுற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்
அள்ளிய தெள்ளமு தன்னை எம் அன்னை
ஆருயிரே பள்ளி எழுந்தருளாயே!

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்
பார்மிசை நின்னொளி காணுதற்கு அலந்தோம்
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்
சுருதிகள் பயந்தனை சாத்திரம் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை அம்மே
நிருதர்கள் நடுக்குற சூல்கரத் தேற்றாய்
நிர்மலையே பள்ளி எழுந்தருளாயே!

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீ அறியாயோ ?
பொன்னனை யாய்வெண் பனிமுடி இமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே!
என்ன தவங்கள் செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட்கு ஏழையம் யாமே ?
இன்னமும் துயிலுதியேல் இது நன்றோ ?
இன்னுயிரே பள்ளி எழுந்தருளாயே!

(i) இக்கவிதையில் பள்ளி எழுச்சி பாடப்படுவது யாரை நோக்கி, எதற்காக என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(ii) தாய்நாட்டின்மீது கவிஞர் கொண்ட பக்தியும் மதிப்பும் வெளிப்படுமாற்றை விளக்குக.

(iii) சூரியோதயம் பற்றி கவிஞர் எவ்வாறெல்லாம் விபரிக்கிறார் என்பதை விளக்கி, அதன்மூலம் அவர் உணர்த்த விரும்பும் கருத்தைத் தெளிவுபடுத்துக.

(iv) 'நின் சேவடி அணிவதற் கென்றே, கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்' என்ற அடிகளின் பொருளையும் அவற்றில் வெளிப்படும் கவிச்சிறப்பையும் விளக்குக.

**அல்லது**

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk



(ஆ) பாலத்தின்மீது கிராதியின் ஓரமாக, பாட்டியம்மாள்மீது பட்டுவிடக் கூடாதே என்ற பய உணர்வோடு ஒதுங்கிநின்று கையிலுள்ள சிறு தகரப்பெட்டியுடன் கும்பிட்டான் ஒரு பழைய, பழகிய நாவிதன்.

"பாட்டியம்மா... எங்கே, நெய்வேலியிலிருந்தா ?" என்று அன்புடன் விசாரித்தான்.

"யாரு வேலாயுதமா ? ஆமா!... உன் பெண்டாட்டி குளி குளிச்சுட்டாளா ?" என்று ஆத்மார்த்தமாய் விசாரித்தாள் கிழவி.

"ஆச்சுங்க... ஆம்பளைப் பையன்தான்."

"நல்லாயிருக்கட்டும்... பகவான் செயல்...! இது மூணாவது பையனா?"

"ஆமாமுங்க" என்று பூரித்துச் சிரித்தான் வேலாயுதம்.

"நீ அதிர்ஷ்டக்காரன்... எந்தப் பாடாவதுபட்டுப் படிக்க வச்சுடு, கேட்டியா ?" என்றதும் வேலாயுதம் குடுமியைச் சொறிந்தவாறு சிரித்தான்.

"அட அசடே, என்ன சிரிக்கிறே ? காலம் வெகுவாய் மாறிண்டு வரதுடா. உன் அப்பன் காலமும் உன் காலமும்தான் இப்படிப் பொட்டி தூக்கியே போயிடுத்து... இனிமே இதொண்ணும் நடக்காது... புருஷாள் எல்லாம் ஷாப்புக்குப் போறா... பொம்மனாட்டிகள்லேயும் என்னை மாதிரி இனிமே கெடையாதுங்கறதுதான் இப்பவே தெரியறதே... ம் எல்லாம் சரிதான் காலம் மாறும்போது மனுஷாளும் மாறணும்... என்ன நான் சொல்றது ?" என்று கூறி ஏதோ ஹாஸ்யம் பேசிவிட்ட மாதிரி பாட்டி சிரித்தாள். பதிலுக்கு அவனும் சிரித்தான்.

"இந்தா, வெயிலுக்கு ரெண்டைக் கடிச்சுண்டு போ" என்று இடுப்பிலிருந்த பையில் பிதுங்கி நின்ற இரண்டு வெள்ளரிப் பிஞ்சுகளை எடுத்து அவனது ஏந்திய கைகளில் போட்டாள்.

"பஸ்லே வரச்சே அணாவுக்கு நாலுன்னு வித்தான்... கொழந்தைகளுக்கு ஆகுமேன்னு ஒரு நாலணாவுக்கு வாங்கினேன்" என்று அவள் சொன்னதும், வேலாயுதம் ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் தன்னை அவள் கடக்கும் வரை நின்று பின்னர் தன் வழியே நடந்தான்.

(i) வேலாயுதத்துக்கும் பாட்டியம்மாவுக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவு வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(ii) சமூகத்தில் வேரூன்றியுள்ள சாதி வேறுபாட்டையும் தீண்டாமையையும் ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

(iii) காலவேறுபாடு பற்றிய ஆசிரியரின் கருத்து வெளிப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(iv) இவ்வுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ள பேச்சுத் தமிழின் பயன்பாடு பற்றிக் கருத்துரை வழங்குக.

(16 புள்ளிகள்)

## பகுதி II

**3.** **குறிப்பறிதல்** அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) குறிப்பறிய வல்லாரது சிறப்பு

(ஆ) குறிப்பறியும் ஆற்றல் அற்றாரது இழிவு

(இ) குறிப்பறிவதற்குக் கருவியாக முகமும் கண்ணும் அமையுமாறு

(ஈ) வள்ளுவர் உவமை அணியினைக் கையாளும் சிறப்பு (20 புள்ளிகள்)

**4.** பெரியாழ்வாரின் **வெண்ணெயளைந்த...** என்னும் பதிகத்தின் அடிப்படையில் மேல்வருவனவற்றைத் தெளிவுறுத்துக.

(அ) கண்ணனின் குழந்தைக் குறும்புகள்

(ஆ) ஒரு தாயின் இயல்புகள் யசோதையின் பேச்சிலும் செயலிலும் புலப்படுமாறு

(இ) அவதார காலத்தில் கண்ணன் நிகழ்த்திய திருவிளையாடல்கள்

(ஈ) பெரியாழ்வாரின் பக்தியும் கவியாற்றலும் (20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk



5. **கைகேயி சூழ்வினைப் படலத்தில்** இராமன், தசரதனைத் தேடி, கைகேயி மாளிகை அடைந்ததன் பின்னர் நடந்தவற்றைக் கூறும் பகுதியில்,

(அ) இராமனது பணிவு

(ஆ) அவனது பற்றற்ற மனப்பான்மை

(இ) கைகேயியின் கொடுந்தன்மை

(ஈ) அவளது பேச்சுச் சாதுரியம்

(உ) உவமையணியினைக் கையாள்வதில் வெளிப்படும் கம்பனது ஆற்றல்

என்பன புலப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக. (20 புள்ளிகள்)

6. புதுமைப்பித்தனின் **சாபவிமோசனம்** என்ற சிறுகதையில்

(அ) அகலிகையின் குற்ற உணர்வு காரணமான மனச்சஞ்சலம்

(ஆ) சீதையுடன் உறவாடுவதில் அவள் கொண்ட ஆர்வமும் பெற்ற ஆறுதலும்

(இ) கழிவிரக்க நிலையிலுள்ள கைகேயிமேல் அவள் காட்டும் பரிவு

(ஈ) அநீதி எனக் கண்டதை எதிர்க்கும் அவளது ஆவேசம்

என்பன நேர்த்தியுடன் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

7. பேராசிரியர் மு. வரதராசனின் **மனவலிமை வேண்டும்** எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) நமது வாழ்க்கையோடு தொடர்புடைய உலகம், உடல், மனம் ஆகியவற்றுள் மனதைத் திருத்துவது எளிது என்பதைத் தர்க்கரீதியாக எவ்வாறு விவாதிக்கிறார் ?

(ஆ) மனவலிமை எவ்வாறான பயன்களைத் தரும் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார் ?

(இ) மனதைப் பண்படுத்துவதற்கு அவர் காட்டும் வழிகள் யாவை ?

(ஈ) தான் எடுத்துக்கொண்ட கருத்தை வலியுறுத்துவதற்கு கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள் யாவை ?

(20 புள்ளிகள்)

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) மழையும் மழையின் விளைவுகளும் சீறாப்புராணம் **மழை அழைப்பித்த படலத்தில்** சித்திரிக்கப்படுமாறு

(ஆ) படிக்காசுப் புலவரின் பாடற் சிறப்பில் சொக்கநாதப் புலவர் கொண்ட ஈடுபாடு

(இ) **நீண்ட பயணம்** நாவலில் ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்கள் எடுத்துக்காட்டப்படுமாறு

(ஈ) **ஆண்டவன் நீதான்** என்ற கவிதையில் விவசாயி பற்றிய சுபத்திரனின் கருத்துகள் வெளிப்படுமாறு

(20 புள்ளிகள்)

* * *

kalvi.lk

24587

AL/2015/72/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

| | | | |
|---|---|---|---|
| දෙමළ II<br>தமிழ் II<br>Tamil II | 72 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி **II** இன் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் **'அ'** பகுதியிலுள்ள **இருபது** வினாக்களும் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

**சுட்டெண் :** ..........................

## பகுதி I

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் உதட்டுப்பல் ஒலி
(1) க் (2) ம் (3) வ் (4) ந் (5) ன் (......)

1.2 பின்வருவனவற்றுள் 'உ'கரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொல்
(1) பாக்கு (2) பட்டு (3) பஞ்சு (4) முயல் (5) இருமல் (......)

1.3 ல், ள், ழ் ஆகிய ஒலிகளைக் குறிக்கும் பொருத்தமான ஒலி வகை
(1) மூக்கொலி (2) மருங்கொலி (3) ஆடொலி
(4) வெடிப்பொலி (5) உரசொலி (......)

1.4 பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்மயக்கம் இடம்பெறும் சொல்
(1) பல்லி (2) பக்கம் (3) அவ்வை (4) வட்டம் (5) பஞ்சம் (......)

1.5 பின்வருவனவற்றுள் உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
(1) போர்வை (2) அறிவை (3) தேவை (4) அரிவை (5) தெரிவை (......)

1.6 பின்வருவனவற்றுள் குற்றியலுகரப் புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்
(1) சேர்க்கை (2) நோக்கை (3) வாழ்க்கை (4) படுக்கை (5) இருக்கை (......)

1.7 பின்வருவனவற்றுள் பகுபதமாகவும் பகாப்பதமாகவும் அமையும் சொல்
(1) பாவை (2) நாவை (3) நோவை (4) கோர்வை (5) கூகை (......)

1.8 பின்வருவனவற்றுள் சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்
(1) நாட்டுக்கு (2) நாட்டிற்கு (3) அவர்கட்கு (4) நாய்க்கு (5) வட்டிக்கு (......)

1.9 அமைச்சர் அவர்களே தங்கள் வரவு நல்வரவாகுக - இவ்வாக்கியத்தில் 'தங்கள்' என்பது
(1) படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் (2) படர்க்கைப் பன்மைப் பெயர்
(3) முன்னிலைப் பன்மைப் பெயர் (4) முன்னிலை மரியாதை ஒருமைப் பெயர்
(5) படர்க்கை மரியாதை ஒருமைப் பெயர் (......)

1.10 நீ வந்தது எனக்குத் தெரியாது - இவ்வாக்கியத்தில் 'வந்தது' என்பது
(1) இறந்தகால வினைமுற்று (2) அ∴றிணை ஒன்றன்பால் வினைமுற்று
(3) பயனிலை (4) வினையாலணையும் பெயர்
(5) காலம்காட்டும் தொழிற்பெயர் (......)

[பக். 2 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

kalvi.lk



1.11 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' - இதில் வரும் 'ஆட்டுவி' என்பது
(1) ஏவல்வினை (2) பிறவினை (3) காரணவினை
(4) நிபந்தனைவினை (5) செய்வினை (......)

1.12 பின்வருவனவற்றுள் 'வை' துணைவினையாக வரும் வாக்கியம்
(1) நான் இங்குதான் பணத்தை வைத்தேன்.
(2) நான் போதியளவு பணம் வைத்திருக்கிறேன்.
(3) பாதை குண்டும் குழியுமாக இருக்கிறது; காலைப் பார்த்து வைத்து நடக்க வேண்டும்.
(4) அம்மா சாப்பாட்டை மேசையில் எடுத்து வைத்தார்.
(5) அவர் மகளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்துவைத்திருக்கிறார். (......)

1.13 பின்வருவனவற்றுள் பெயரடையாகப் பயன்படும் சொல்
(1) நாளுக்குநாள் (2) நாள்தோறும் (3) நாளாந்தம்
(4) நாளாந்த (5) நாளாவட்டத்தில் (......)

1.14 பின்வருவனவற்றுள் நீங்கற் பொருளில் 'ஆல்' உருபு வரும் தொடர்
(1) தீயினால் சுட்ட புண் (2) கவலையால் மெலிந்தவன்
(3) மரத்தால் விழுந்தவன் (4) ஜன்னலால் வீசினான்
(5) காலத்தினால் செய்த நன்றி (......)

1.15 'அவரது தொனியில் ஆவேசமும் முகத்தில் இயலாமையும் விரக்தியும் மாறிமாறி மின்னலடித்தன.' - இவ்வாக்கியத்தில் இடம்பெறும் 'உம்'
(1) எண்ணும்மை (2) எச்ச உம்மை (3) முற்றும்மை
(4) எதிர்மறை உம்மை (5) இணைப்பும்மை (......)

1.16 பின்வருவனவற்றுள் கூட்டு வாக்கியம்
(1) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போனேன்.
(2) நானும் அப்பாவும் நேற்று ஊருக்குப் போயிருந்தோம்.
(3) நானும் அப்பாவுடன் நேற்று ஊருக்குப் போனேன்.
(4) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போயிருக்கலாம்.
(5) நான் அப்பாவுடன் நேற்று ஊருக்குப் போகவில்லை. (......)

1.17 நீங்கள் வருவீர்கள் என்று நான் நெடுநேரம் காத்திருந்தேன் - இவ்வாக்கியத்தில் இடம்பெறும் 'நீங்கள் வருவீர்கள்' என்ற வாக்கியத்தொடர்
(1) முற்று வாக்கியத்தொடர் (2) எச்ச வாக்கியத்தொடர் (3) நிரப்பி வாக்கியத்தொடர்
(4) சார்புத்தொடர் (5) தனி வாக்கியம் (......)

1.18 தினமும் இட்டிலியும் தோசையும் சாப்பிட்டு எனக்கு நாக்குச் செத்துப்போய்விட்டது - இவ்வாக்கியத்தில் 'நாக்குச் செத்துப்போய்விட்டது' என்பது
(1) மரபுத்தொடர் (2) பயனிலைத்தொடர் (3) உருவகத்தொடர்
(4) வினைத்தொடர் (5) வினையெச்சத்தொடர் (......)

1.19 'அயோத்திதாசர் ஐரோப்பிய கல்விப்புலச் சட்டகத்திற்கு வெளியே இயங்கிய மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பயின்றவர்' - இவ்வாக்கியப் பொருளோடு **தொடர்பற்ற** வாக்கியம்
(1) அயோத்திதாசர், மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பயின்றவர்.
(2) ஐரோப்பிய கல்வி, மரபுவழித் தமிழ்க் கல்விக்கு வெளியே இயங்கியது.
(3) மரபுவழித் தமிழ்க் கல்வி, ஐரோப்பிய கல்வியுடன் தொடர்பற்றிருந்தது.
(4) ஐரோப்பிய கல்விப்புலம், மரபுவழித் தமிழ்க் கல்வியைச் சார்ந்திருந்தது.
(5) அயோத்திதாசர், ஐரோப்பிய கல்விப் புலத்தில் பயிலவில்லை. (......)

1.20 பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாத இணைப்பு
(1) தொடர்ந்தும் மழை பெய்தது ஆகவே நான் பாடசாலை செல்லவில்லை.
(2) தொடர்ந்தும் மழை பெய்தது ஆயினும் நான் பாடசாலை சென்றேன்.
(3) தொடர்ந்தும் மழை பெய்தது ஆதலால் நான் பாடசாலை செல்லவில்லை.
(4) தொடர்ந்தும் மழை பெய்தது எனவே நான் பாடசாலை சென்றேன்.
(5) தொடர்ந்தும் மழை பெய்தது என்றாலும் நான் பாடசாலை சென்றேன். (......)

(20 புள்ளிகள்)

* *

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

24587



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **1**ஆம் வினாவின் **'ஆ'** பிரிவுக்கும் **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடை தருக.

1. அகப்புணர்ச்சி என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
2. ஐகாரக் குறுக்கம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
3. கூட்டுப்பெயர் என்றால் என்ன ? உதாரணம் தருக.
4. செயப்பாட்டு வினையை உதாரணம் தந்து விளக்குக.
5. பெயர்த்தொடர் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

பழமையைப் பற்றிப் பேசும் பொழுது, நாங்கள் பண்டைக் காலத்து நற்குணங்களைப்பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். 'அப்பேர்ப்பட்ட தன்மைகள் நம்மவர்களுக்குத் தற்போது மிகமிகத்தேவை' என்று பழமைப்பிரியர்கள், தங்கள் பழமை மோகத்துக்கு வியாக்கியானஞ் செய்யலாம். இதுவும் அபத்தமாகும். பாண்டவர்களுக்கு பங்கு கொடுக்கமாட்டேன் என்று வல்லடி வழக்குப் பேசிய துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் நற்குணம் படைத்தவர்களா ? வீட்டில் தனது மனைவி மனவேதனைப் பட்டுக்கொண்டிருக்க, விலைமாதின் இல்லம் சென்ற கோவலனைப் போல, பழமைப் பிரியர்கள் வாழ உளம் கொண்டிருக்கிறார்களா ? எல்லாக் காலங்களிலும் நல்லவர்களும் தீயவர்களும் கலந்துதான் இருக்கிறார்கள் என்ற உண்மை, பழமையில் மோகங் கொண்டவர்களின் கண்ணில் படாதது, நமது நாட்டின் துர்ப்பாக்கியமே.

வள்ளுவனார் காலத்துத் தமிழ், அந்தக் காலத்துக் காசுகள், அக்காலத்து நடையுடை பாவனைகள், அரசியல்முறை, வாழ்க்கைத் திட்டம் எதுவும் இக்காலத்துக்குத் துளிக்கூட பொருத்தமே இல்லை; செல்லவும் செல்லாது.

பழமை, இனி ஒரு நாளும் திரும்பி வர முடியாது. பழமையைப் பற்றிப் பேசுவது, மரித்துப்போன குழந்தையைப் பற்றி புலம்புவதுபோல என்பதுதான் உண்மை. சிந்தனா சக்தியை இழந்தவர்கள்தான், பழமையைப்பற்றி கிளிப்பிள்ளைகளைப்போல பேசுவார்கள். உலகம், ஸயன்ஸிலும் பொருளாதாரத்திலும் அரசியல் திட்டத்திலும் பிரமிக்கத்தக்க முற்போக்கு அடைந்துவருகிறது. இந்த முற்போக்கைப் போலவே, வெறுக்கத்தக்க தன்மைகளும் நிலைமைகளும், நாளுக்கு நாள் மலிந்து வருகின்றன. இந்தக் காலத்தை சமாளித்து, வெற்றியுடனும் சுகப்பெருக்குடனும் சுதந்திரத்துடனும் வாழ வழிகளைத் தேடுவதுதான் புத்திசாலித்தனமாகும். அதுதான் பொறுப்பு வாய்ந்த தன்மையாகும். மனிதனுடைய செயல் திறனையும் சாகஸத் திறனையும் சிந்தனா சக்தியையும் உபயோகித்து, விமோசனத்திற்கு மார்க்கத்தைத் தேடுவதற்கு இதுதான் தக்க தருணம்.

கரணம் தப்பினால் மரணம். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டு, பழமையைப்பற்றிப் பேசுவது விபரீதமாக முடியும். பழமையிலுள்ள நல்லவைகளையும் உபயோகமுள்ளவைகளையும் வைத்துக்கொண்டு, புதுமையைப் படைப்பதுதான் சிந்தனையாளர்களுக்கு அழகாகும்.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஸமீபத்திலே "மாடர்ன் ரிவ்யூ" என்ற கல்கத்தாப் பத்திரிகையில் உயோநே நோகுச்சி என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதியிருக்கிறார். அவர் அதிலே சொல்வதென்னவென்றால்:- இங்கிலாந்து அமெரிக்கா என்ற தேசங்களிலுள்ள இங்கிலீஷ் கவிதையைக் காட்டிலும் ஜப்பானியக் கவிதை சிறந்தது. காரணமென்ன ?

மேற்குக் கவிதையில் சொல்மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கையில்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலே இல்லை. எதுகை, சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற் குணத்தாலும், தெளிவில்லாமையாலும், பல சொற்களைச் சேர்த்து, வெறுமே பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக்கொண்டே போகும் வழக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகமிருக்கிறது. தம்முடைய மனத்திலுள்ள கருத்தை நேரே வெளியிடுவதில் மேற்குப் புலவர் கதைகளெழுதுவோரைக் காட்டிலும் சக்தி குறைந்திருக்கிறார்கள்.

ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிடவேண்டும் என்ற ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண்டிருப்பவன் புலவனாகமாட்டான். கவிதையெழுதுபவன் கவியன்று; கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், பலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப்போய், இயற்கையுடனே ஒன்றாகி வாழ்பவனே கவி.

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk



ஜப்பானிய பாஷையில் பதினேழசை கொண்ட 'ஹொக்கு' என்ற பாட்டு ஒரு தனிக் காவியமாக நிற்கும். முப்பத்தோரசையுள்ள 'உத்தா' (உக்தம்) என்பதும் அங்ஙனமே. உயோநே நோகுச்சி தமது கருத்தை விளக்கும் பொருட்டுச் சில திருஷ்டந்தங்கள் காட்டியிருக்கிறார்.

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மையென்று நோகுச்சிப் புலவர் சொல்வதுடன், ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது. "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்." கிழக்குத் திசையின் கவிதையிலேயே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ்நாட்டில் முற்காலத்திலே இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும், ஒரேயடியாய் கவிதை சுருங்கியே போய் விட்டால் நல்லதன்று. ஜப்பானிலேகூட எல்லாக் கவிதையும் 'ஹொக்குப்' பாட்டன்று. நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மையிருக்கிறது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

(i) கவிதை பற்றிய நோகுச்சியின் கருத்தைத் தெளிவுபடுத்துக.
(ii) கவிஞன் பற்றிய நோகுச்சியின் கருத்து யாது ?
(iii) ஆங்கிலக் கவிதையைவிட ஜப்பானியக் கவிதை சிறந்தது என்பதற்கு நோகுச்சி கூறும் காரணம் யாது ?
(iv) 'ஹொக்கு', 'உத்தா' ஆகிய ஜப்பானியக் கவிதை வடிவங்களுக்கிடையே உள்ள வேறுபாடு யாது ?
(v) கவிதையின் சொற்சுருக்கம் பற்றிய நோகுச்சியின் கருத்துத் தொடர்பான கட்டுரையாசிரியரின் நிலைப்பாடு யாது ?

(10 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிந்து, **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) முதியோரைப் பேணல்
(ஆ) 'நீர் இன்றி அமையாது உலகு'
(இ) வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துதல்
(ஈ) இலங்கையில் மும்மொழிச் சமூகம் ஒன்றை உருவாக்குதல்
(உ) தமிழிலக்கிய விமர்சன வளர்ச்சிக்குப் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பங்களிப்பு (20 புள்ளிகள்)

## பகுதி II

### பிரிவு 'அ'

**4.** (அ) சங்கமருவிய கால இலக்கியப் பண்பு, சங்ககால இலக்கியப் பண்பிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக.
(ஆ) சங்கமருவிய காலத்தெழுந்த அறநூல்களைக் குறிப்பிட்டு, அவற்றின் பொதுப் பண்புகளை விளக்குக.
(இ) சங்கமருவிய காலம் காவியங்களின் தொடக்க காலமாக அமையுமாற்றை ஆராய்க. (15 புள்ளிகள்)

**5.** (அ) பல்லவர் காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களின் பொதுப் பண்புகளை எடுத்துரைக்குக.
(ஆ) பல்லவர்கால பக்தி இலக்கிய மரபு, புதிய இலக்கிய வடிவங்களுக்கு வழிசமைத்தவாற்றைத் தெளிவுறுத்துக.
(இ) அக்காலத்தெழுந்த பக்திசாரா இலக்கியங்கள் பற்றி விபரிக்குக. (15 புள்ளிகள்)

**6.** (அ) ஐரோப்பியர் வருகையால் தமிழில் உரைநடை விருத்தியடைந்தவாற்றை விளக்குக.
(ஆ) உரைநடை வளர்ச்சியின் விளைவாக, தமிழில் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றியவாற்றை ஆராய்க.
(இ) தமிழ்ப் புனைகதைத்துறை வளர்ச்சிக்கான **ஜெயகாந்தனின்** பங்களிப்பை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

### பிரிவு 'ஆ'

**7.** ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்,
(அ) நூற்பதிப்புத்துறை
(ஆ) பத்திரிகைத்துறை
(இ) அகராதித்துறை
ஆகியவற்றுக்கு இலங்கையர் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

**8.** மேல்வருவோருள் யாரேனும் **மூவரின்** இலக்கியப் பங்களிப்பினை மதிப்பிடுக.
(அ) நல்லூர் சின்னத்தம்பிப்புலவர்
(ஆ) சி. வி. வேலுப்பிள்ளை
(இ) பேராசிரியர் ம. மு. உவைஸ்
(ஈ) 'மஹாகவி' து. உருத்திரமூர்த்தி
(உ) எஸ். பொன்னுத்துரை (15 புள்ளிகள்)

* * *

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page